DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: Perumal | Father' Name: Kandasamy |
| Village: Pallavalli | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 59 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 19.07.2022

**O.S. 88/2020 - PW1**

3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை – 1ம் பிரதிவாதி மணி எனது உடன்பிறந்த அண்ணனா என்றால் ஆமாம். வழக்கு சொத்தினை நானும், எனது அண்ணன் மணியும் 04.07.1986 அன்று ரூ.47,000/–த்திற்கு கூட்டாக கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். அதனடிப்படையில் தான் வழக்கு சொத்திற்கு என் பெயரிலும், எனது அண்ணன் பெயரிலும் கூட்டு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6 ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனது அண்ணன் சர்வே எண்.699 சொத்திற்கு கட்டுப்பட்ட 2 ஏக்கர் சொத்தினை பொது அதிகார பத்திரம் 2ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்து அதை அவர் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது. இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து எனக்கே உரிமை என கேட்டு தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது முதல் விசாரணை வாக்குமூலம் வழக்கறிஞரால் தயாரிக்கப்பட்டதா அல்லது என்னால் சொல்லி தயாரிக்கப்பட்டதா என்றால் என்னால் சொல்லி தயாரிக்கப்பட்டதாகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் முதல் பத்தியில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தையும், அதனடிப்படையில் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய பத்திரத்தையும் சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்யக்கோரி வேண்டியிருப்பதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் வா.சா.ஆ.3 ஆவணமானது 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த கிரய ஆவணத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல நான் நகல் எடுத்து வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். வா.சா.ஆ.3 பொது அதிகார பத்திரமானது 04.02.2013 அன்று பதிவாகியுள்ளது என்று சொன்னால் நான் நகலை எடுத்து கொடுத்துள்ளேன் அதிலுள்ள விவரம் எனக்கு தெரியாது. என்னுடைய வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் 02.04.2013 அன்று பொது அதிகாரம் எழுதி கொடுத்திருப்பதாக சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் தவறுதலாக குறிப்பிடப்பட்டிருக்கும். நான் எதில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் ஆவணத்திலோ அல்லது நான் சொல்லியிருப்பதிலோ தவறாக இருக்கும். 2ம்

பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு 26.07.2013 அன்று கிரையம் எழுதி கொடுத்திருப்பதாக சொல்லியிருப்பது தவறு என்றாலும், 28.06.2013 அன்று தான் 2ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் எழுதி கொடுத்ததாக உள்ளது என்றாலும் நான் நகல் எடுத்து வழக்கறிஞரிடம் கொடுத்தேன் தவறுதலாக குறிப்பிடப்பட்டிருக்கலாம். 28.06.2013 அன்று பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தை பதிவு தேதியை நான் வேண்டுமென்றே பொய்யாக உத்தரவு பெற வேண்டி மறைத்து சொல்லிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி பெயரிலான கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கு அதன் பதிவு நாள் தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்பதால் தான் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் முதல் இரண்டு பரிகாரத்திலும் ஆவணங்களின் தேதியை தவறாக குறிப்பிட்டுள்ளதால் எனக்கு வழக்கில் கோரிய முதல் இரண்டு பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணமான நில உரிமை குறிப்பேடு ஆவணத்தில் பட்டா எண்.1083–ல் சர்வே எண்.699–ற்கு 6 நபர்கள் பெயரில் கூட்டு பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஆவணமானது நான் எனது அண்ணன் 1ம் பிரதிவாதியும் சேர்ந்து வழக்கு சொத்து உள்ளிட்ட சொத்துக்களை கிரையம் பெற்ற கிரைய ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் என் அண்ணனிடம் தான் உள்ளது. நான் எனது வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் வா.சா.ஆ.1 கிரையத்திற்கு முழு பணத்தையும் நானே கொடுத்ததாகவும் என் அண்ணன் பெயரை பெயரளவில் சேர்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம் சொல்லியுள்ளேன். நான் வழக்குரையில் சொல்லியுள்ளவாறு வா.சா.ஆ.1 கிரையத்திற்கு கிரைய தொகை முழுவதையும் நானே கொடுத்ததாக வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்ப்பட்டதா என்றால் இல்லை என் தந்தை பணம் கொடுத்து எங்கள் பெயரில் கிரையம் பதிவு செய்யப்பட்டது. வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் பதிவிற்கு நான்கு மாதத்திற்கு முன்னால் நானும், எனது அண்ணனும் சேர்ந்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டோமா என்றால் சரிதான். மேற்படி கிரையத்தின்போது முன்பணமாக ரூ.5,000/–மும், கிரைய தேதியில் ரொக்கமாக ரூ.20,000/–மும் கொடுத்துவிட்டு, ரூ.22,000/– தொகைக்கு நானும், எனது அண்ணனும் சேர்ந்து பாண்டு பத்திரம் எழுதி கொடுத்து அதனடிப்படையிலேயே பத்திரத்தை பதிவு செய்தோம் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரைய ஆவணம் ஏற்படுத்தப்பட்ட 1986 ஆம் ஆண்டில் எனக்கும், என் அண்ணனுக்கும் என்ன வயது என்றால் எனக்கு சுமார் 26, 27 இருக்கும், என் அண்ணனுக்கு வயது 36, 37 இருக்கும். நான் அந்த சமயத்தில் என்ன தொழில் செய்து வந்தேன் என்றால் மோட்டார் மெக்கானிக் வேலை செய்து வந்தேன். என் அண்ணன் என்ன தொழில் அந்த சமயத்தில் செய்து வந்தார் என்றால் கல்யாண புரோக்கர் மற்றும் ரியல் எஸ்டேட் புரோக்கர் தொழில் செய்து வந்தார். நான் எனது வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ள சாட்சி பொய்யானது என்றாலும், வா.சா.ஆ.1 கிரையத்திற்கு என் அண்ணன் தான் முழு பணமும் செலுத்தினார் என்று சொன்னால் அது உண்மையல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஏன் என்னிடம் இல்லை என்றால் கூட்டு குடும்பத்தில் இருந்ததால் என் அண்ணனிடமே இருந்து வந்தது. 1986 ஆம் ஆண்டில் என் தந்தை உயிருடன் இருந்தாரா என்றால் இருந்தார். என் தந்தை உயிருடன் இருந்தால் அவர் தான் கூட்டு குடும்பத்தின் தலைவர் என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 03.06.1993

அன்று நானும், என் அண்ணனும் சேர்ந்து 1–1/2 ஏக்கர் நிலத்தினை ராஜகுமாரி என்பவருக்கு கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். அந்த கிரையத்தை நாங்கள் இருவரும் சேர்ந்து தான் எழுதிகொடுத்தோம் என்றால் ஆமாம் எங்கள் தந்தையும் சேர்ந்து தான் எழுதி கொடுத்தார். வழக்கு சொத்தினை குறித்து நானும், எனது அண்ணனும், என் தந்தையும் சேர்ந்து 1995 ஆம் ஆண்டு எழுத்துமூலமாக பாகப்பிரிவினை ஏற்படுத்திகொண்டோம் என்று சொன்னால் பாகப்பிரிவினை ஏற்படுத்திக்கொண்டோம், அந்த சமயத்தில் கூட்டு கடன் இருந்ததால் நாங்கள் இருவரும் சேர்ந்து கிரையம் கொடுத்த 1–1/2 ஏக்கர் சொத்தில் கிரைய தொகையை மட்டும் என் அண்ணன் எடுத்து கொண்டு மீதி சொத்தையும், கடனையும் எங்களிடமே விட்டுவிட்டு சென்றுவிட்டார். அவ்வாறு நான் சொல்வதுபோல என் அண்ணன் கடனையும், சொத்தையும் என்னிடமே விட்டுவிட்டு சென்றதாக சொல்வதை பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை ஊர் பஞ்சாயத்தில் வாய்மொழியாக பேசப்பட்டது. 1995 ஆம் ஆண்டு எங்களுக்குள் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தை எழுதியது குப்புசாமி என்பவர் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் நானும், என்னுடைய அண்ணனும், என் தந்தையும் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் ஆர்.கிருஷ்ணமூர்த்தி, லோகநாதன், மாணிக்கம் ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் கிழக்கே உள்ள பெருமாளுக்கும், அதனை ஒட்டி மேற்கே உள்ள நிலம் மணிக்கு சார்ந்தது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பாகப்பிரிவினை ஆவணத்தில் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பாக சொத்தினை அவரவர் விற்பதற்கு உரிமை உண்டு என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனடிப்படையில் தான் பட்டா எண்.1083 ஆக என் பெயரிலும், என் அண்ணன் பெயரிலும் கூட்டு பட்டா ஏற்பட்டது என்றால் இல்லை அதற்கு முன்பு இருந்தே வாங்கியது முதலாக கூட்டு பட்டாவாக தான் இருந்து வருகிறது. 1995 ஆம் வருடத்திய பாகப்பிரிவினையின் அடிப்படையில் தான் என் அண்ணன் 2 ம் பிரதிவாதி பெயருக்கு 04.02.2013 தேதியில் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரத்தில் சாட்சிகளாக 1 ம் பிரதிவாதியின் மனைவி அஞ்சலா, மகள்கள் மங்கையர்க்கரசி மற்றும் திருமதி மற்றும் 2 ம் பிரதிவாதியின் அக்கா ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்கள் என்றால் நான் பின்னிட்டு ஆவணத்தை வாங்கி பார்த்தேன் அவ்வாறு தான் இருந்தது. 2 ம் பிரதிவாதி பெயருக்கு எழுதி கொடுத்த பொது அதிகார ஆவணத்தின் சொத்து விவரத்தில் சர்வே எண்.699–ன் செக்குபந்தி கிழக்கே பி.கே,பெருமாள் நிலம், மேற்கே பிரேமா நிலம், வடக்கே குட்டை புறம்போக்கு, தெற்கே ராஜகுமாரி நிலம் அதற்கு மத்தியில் கட்டுப்பட்ட 2 ஏக்கர் 66 செண்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம் அந்த ஆவணத்தில் அவ்வாறு சொல்லப்பட்டுள்ளது. மேற்படி பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் தான் 2 ம் பிரதிவாதி 3 ம் பிரதிவாதி பெயருக்கு என் அண்ணனுக்கு பாத்தியப்பட்ட 2 ஏக்கர் 66 செண்ட் சொத்தினை 28.06.2013 அன்று கிரைய ஆவணம் ஏற்படுத்திகொண்டார் என்றால் சரியல்ல அந்த சொத்தில் நான் தான் பயிர் செய்து சுவாதீனத்தில்இருந்து வருகிறேன். அந்த சொத்தினை 2 ம் பிரதிவாதி எப்போதும் அளந்து பார்க்கவில்லை, எனது அண்ணன் சொத்தை விற்றுவிட்டதாக என்னிடம் தற்போது வரை சொல்லவில்லை. நான் சொல்வதுபோல வழக்கு சொத்து எதுவும் எனது

சுவாதீனத்தில் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 3ம் பிரதிவாதி ரூ.8,00,500/-க்கு கிரையம் பெற்றது முதலாக அவரது சுவாதீனத்தில் தான் 2 ஏக்கர் 66 செண்ட் சொத்து இருந்து வருகிறது என்றாலும், அந்த சொத்திற்கு திருமுருகன் பெயரில் தான் வருவாய்துறை ஆவணங்கள் இருந்து வருகிறது என்றாலும் சரியல்ல. அந்த சொத்தில் நான் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறேன். வாணியம்பாடி வட்டாட்சியர் வழங்கிய பட்டா எண்.1083-ற்கான கூட்டு பட்டாவில் திருமுருகன் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் சேர்க்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்து முழுவதும் எனது சுவாதீனத்தில் தான் இருந்து வருகிறது என்பதை நிரூபிக்க வருவாய்துறை ஆவணங்களை நான் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் கூட்டு பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். ரமாமணி என்பவர் என் மனைவி என்றால் சரிதான். என் மனைவி ரமாமணி பெயரில் 16.09.2013 அன்று சர்வே எண்.669-ற்கு கட்டுப்பட்ட 2 ஏக்கர் 66 செண்ட் சொத்தினை தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளேன் என்றால் அது வங்கி கடனுக்காக ஏற்படுத்தப்பட்டதாகும். வங்கி கடனுக்காக எழுதப்பட்டது என்று தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதா என்றால் அவ்வாறு எல்லாம் எழுதப்பட இயலாது. நான் மோசடியாக எனக்கு சொந்தம் இல்லாத சொத்தை அபகரிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல, எனது சொத்தை பொறுத்து நான் பொய் சொல்லவில்லை. என் அண்ணன் சொத்தை நான் அபகரிக்க முயற்சிக்கிறேன் என்று சொன்னால் அவருக்கு சொத்தே கிடையாது அது என்னுடைய சொத்தாகும். என் மனைவி பெயருக்கு எழுதப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் செக்குபந்தியாக முனியம்மாள் வகையறா நிலத்திற்கு தெற்கு, ராஜகுமாரி நிலத்திற்கு வடக்கு, உமாபதி, கிருஷ்ணன் நிலத்திற்கு மேற்கு, பி.கே.மணி நிலத்திற்கு கிழக்கு இதன் மத்தியில் 2 ஏக்கர் 66 செண்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த செக்குபந்தியில் சொல்லப்பட்டுள்ள பி.கே.மணி என் அண்ணன் என்றால் சரிதான். செட்டில்மெண்ட் எழுதிய பிறகு நானும், என் மனைவியும் சேர்ந்து நிர்மலா என்பவருக்கு கிரைய ஒப்பந்தம் எழுதி கொடுத்தோம் என்றால் சரிதான். நாங்கள் எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்தத்திலும் செக்குபந்தியாக முனியம்மாள் வகையறா நிலத்திற்கு தெற்கு, ராஜகுமாரி நிலத்திற்கு வடக்கு, உமாபதி, கிருஷ்ணன் நிலத்திற்கு மேற்கு, பி.கே.மணி நிலத்திற்கு கிழக்கு இதன் மத்தியில் 2 ஏக்கர் 66 செண்ட் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாங்கள் எழுதி கொடுத்த கிரைய ஒப்பந்தம் தற்போது வரை ரத்து செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். ஒப்பந்தத்தின்படி சொத்தின் சுவாதீனத்தை நிர்மலாவிடம் கொடுத்தோமா என்றால் கொடுக்கவில்லை. எவ்வளவு தொகைக்கு கிரைய ஒப்பந்தம் எழுதினோம் என்றால் ரூ.2,10,000/-த்திற்கு எழுதினோம், கிரையம் குறித்து பிறகு பேசிகொள்ளலாம் என்று பேசினோம். என் மனைவி பெயருக்கு 2 ஏக்கர் 66 செண்ட் சொத்தை பொறுத்து தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துவிட்டதால் அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும், நான் ரமாமணியை தரப்பினராக சேர்க்காமல் நடத்தி வருவதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயருக்கு பொது அதிகாரம் எழுதி கொடுத்து, 2ம் பிரதிவாதி அதனடிப்படையில் 3ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் கொடுத்துவிட்டதால் மேற்படி பொது அதிகாரமானது செயல் இழந்துவிட்டது என்று சொன்னாலும், அதனடிப்படையில் நான் அந்த ஆவணத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் கோர இயலாது என்றாலும் சரியல்ல. பொது அதிகார பத்திரத்திலும், கிரைய ஆவணத்திலும்

நான் தரப்பினர் இல்லை என்பதால் மேற்படி ஆவணங்களை பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்று சொன்னால் சரியல்ல. 2013 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களை பொறுத்து 7 ஆண்டுகள் கழித்து 2020 ஆம் ஆண்டு செல்லாது என விளம்புகை கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பதால் இந்த வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.